**அசல் வழக்கு எண். 125/2019**

03.12.2024

**பெயர் – செல்லமுத்து (Pw1)**

**சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

(1) இந்த வழக்கை தாக்கல் செய்தது எனது மனைவி திலகவதி என்றால் சரிதான். இந்த வழக்கில் நான் சாட்சி என்ற முறையில் தான் சாட்சியமளிக்கிறேன் என்றால் எனது மனைவிக்காக நான் சாட்சியம் அளிக்கிறேன். இந்த வழக்கை நடத்துவதற்கும், சாட்சியம் அளிப்பதற்கும் எனது மனைவி எனக்கு பொது அதிகாரம் எழுதிக்கொடுக்கவில்லை என்றால் சொத்து என் மனைவி பெயரில் நான் தான் வாங்கி கொடுத்தேன். 01.11.2020 ம் தேதி என் மனைவி பெயரில் இருந்த சொத்தின் மூல பத்திரம் பற்றி தெரியுமா என்றால் தெரியும். வா.சா.ஆ.1 கிரைய ஆவணத்தில் உள்ள சொத்து விவரத்தினை பத்திர எழுத்தரிடம் யார் சொன்னது என்றால் நான் தான் சொன்னேன். என் மனைவி பெயருக்கு யாரிடம் இருந்து கிரையம் பெற்றேன் என்றால் அன்பு ஆனந்திடம் இருந்து கிரையம் பெற்றேன். அன்பு ஆனந்திற்கு அந்தசொத்து எப்படி பாத்தியம் என்றால் அவரது தகப்பனார் அவரது தாய்க்கு உயில் எழுதி வைத்து தாயிடம் இருந்து அன்பு ஆனந்திற்கும், அவரது மனைவிக்கு உயில் மூலமாக சொத்து பாத்தியம் ஏற்பட்டது. தாவாச் சொத்தின் மூல பத்திரத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மேற்படி மூல பத்திரத்தில் உள்ள சொத்து விவரத்திற்கு முரண்பட்டு வா.சா.ஆ.1 ஆவணத்தில் சொத்து விவரம் எழுதப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

(2) தாவாச் சொத்தின் கிழபுறத்தில் என்ன அம்சம் உள்ளதாக ஆவணத்திலும், வழக்கிலும் குறிப்பிட்டுள்ளேன் என்றால் தாவாச் சொத்திற்கு கிழக்கு புறமாக காரத்தொழுவு – மடத்துக்குளம் ரோடு உள்ளது. தாவாச் சொத்தின் தென்புறம் என்ன உள்ளது என்றால் நான் கிரையம் பெற்ற போது முத்துச்சாமி கவுண்டர் தோப்பாக இருந்தது. நான் கிரையம் பெற்ற போது மேல்புறத்தில் முத்துச்சாமி கவுண்டருக்கு பாத்தியப்பட்ட தோப்பாக இருந்தது என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணத்தை தவிர தாவாச்சொத்திற்கு உண்டான பட்டா, சிட்டா, அடங்கல், வரைபடம் போன்ற வருவாய் துறை ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தாவாச் சொத்திற்கு வடபுறத்தில் பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட கல்யாண மண்டபம் உள்ளது என்றால் சரிதான்.

வடபுறத்தில் உள்ள சொத்திற்கும், தாவாச் சொத்திற்கும் இடையில் உள்ள கிழமேல் காம்பவுண்ட் சுவர் சம்மந்தமாகவும், இடம் சம்மந்தமாகவும் அசல் வழக்கு எண். 92/2019 என்ற வழக்கு இந்நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். மேற்படி வழக்கு தாக்கல் செய்த பிறகு அதன் சம்மனை பெற்ற பின்னிட்டு இந்த வழக்கை நான் தாக்கல் செய்தேன் என்றால் அந்த வழக்கு தாக்கல் செய்யும் வரை பூசுவதற்கு என்னை அனுமதித்தார்கள். அதற்கு பின்னிட்டு பூசுவதற்கு அனுமதிக்காததால் இந்த வழக்கை தாக்கல் செய்தேன். தாவாச் சொத்தின் மேற்புறம் இருந்த முத்துச்சாமி கவுண்டருக்கு பாத்தியப்பட்ட தென்னை தோப்பு முழுவதும் அழிக்கப்பட்டு மனை இடங்களாக பிரித்து பல்வேறு நபர்களுக்கு விற்பனை செய்யப்பட்டது என்றால் சரிதான்.

(3) மேற்படி வகையில் தான் தாவாச் சொத்திற்கு மேல்புறமாக உள்ள காலியிடமும், வீடும் பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்டது என்றால் என் காம்பவுண்டிற்கு மேற்குபுறம் உள்ள இடம் தான் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டது ஆகும். நான் கிரையம் பெற்ற போது கட்டிடமா வாங்கினேனா, காலியிடமாக வாங்கினேனா என்றால் ரைஸ்மில் குடோனாக இருந்தது அதில் பிரதிவாதி வடபுறம் காம்பவுண்டிற்குள் உள்ள 2 கட்டிட குடோனை வாங்கினார் நான் தென்புறம் காம்பவுண்டிற்குள் உள்ள 2 வீடுகள் மற்றும் களத்தை காம்பவுண்டுடன் வாங்கினேன். தாவாச் சொத்தின் மேல்புறம் உள்ள காம்பவுண்டோடு சேர்ந்து தான் வீட்டையும் கிரையம் வாங்கினேன் என்றால் சரிதான். மேல்புறத்தில் உள்ள தென்வடல் சுவற்றை நான் சென்று பராமரிக்கவும், வெள்ளையடிக்கவும் மூல பத்திரத்தில் கண்டு எழுதப்பட்டுள்ளதா என்றால் இல்லை. மூல பத்திரமான உயிலுக்கு முன்பாக இருந்த ஆவணங்களில் காம்பவுண்ட் சுவரை பராமரிக்கவும், வெள்ளையடிக்கவும், போக்குவரத்து செய்யவும் கண்டு எழுதப்பட்டுள்ளதா என்று தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொள்ளவில்லை. உயிலுக்கு முன்பான ஆவணங்களில் மேற்கண்டவாறு வாசகங்கள் காணப்படவில்லை என்றால் நாங்கள் அனுபவப்படி பயன்படுத்தி வந்தோம். பூசுவதற்கு முத்துச்சாமி கவுண்டர் அனுமதித்து வந்தார்.

(4) நான் ஆவணங்களின் அடிப்படையில் பூசுவதற்கு அனுமதி கேட்கிறேனா அல்ல அனுபவத்தின் அடிப்படையில் பூசுவதற்கு அனுமதி கேட்கிறேனா என்றால் நான் அனுபவித்து வந்ததன் அடிப்படையில் பூசுவதற்கு அனுமதி கேட்கிறேன். எனது காம்பவுண்ட்டிற்கு வெளியே மேற்கு புறமாக 3 அடி துரத்தில் அளவை கல் உள்ளது.

முத்துச்சாமி உயிருடன் இருக்கும் வரை அனுமதித்து வந்தார். தாவாவில் வா.சா.ஆ.1 பத்திரப்படி கண்ட சொத்து விவரத்தை குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். என்ன பரிகாரம் கேட்டு என் மனைவி வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் பூசுவதற்கு இடம் 3 அடி உள்ளது பூசுவதற்கு அனுமதிக்க வேண்டும் என்றும், தென்புறத்தில் தடத்தில் காம்பவுண்ட் கட்டி உள்ளதால் அதை அப்புறப்படுத்தி தர வேண்டும். என்ன அளவுள்ள இடத்தில் எவ்வளவு அகலம், நீளம், உயரத்தில் பிரதிவாதி காம்பவுண்ட் கட்டி உள்ளார் என்பதை சொத்து விவரத்தில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். நான் கிரையம் பெற்ற இடத்திற்கு அருகில் இருந்த தோப்பு எப்போது மனையிடங்களாக பிரிக்கப்பட்டு விற்பனை செய்யப்பட்டது என்றால் நான் கிரையம் பெற்ற 2-3 வருடங்களுக்குள் இருக்கும்.

(5) பிரதிவாதி 2008 ம் ஆண்டு கிரையம் பெற்றார் என்றால் எனக்கு அது பற்றி தெரியாது. இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு 7-8 வருடங்களுக்கு முன்பாக கிரையம் பெற்றார் என்றால் சரிதான். பிரதிவாதி 2007-2010 ஆண்டு வாக்கில் வீடு கட்டினார் என்றால் இருக்கலாம். பிரதிவாதி காம்பவுண்ட் சுவரை 2007-2010 ஆண்டு வாக்கில் தான் கட்டினார் என்றால் சரிதான். நான் என்ன படித்துள்ளேன் என்றால் நான் 11ம் வகுப்பு படித்துள்ளேன். வழக்கில் சொல்லியுள்ள விவரங்களை தெரிந்து நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். நான் வழக்கில் பிரதிவாதிகள் எந்த தேதியில், எந்த வருடத்தில் காம்பவுண்ட் சுவர் கட்டினார் என்று குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை. இந்த வழக்கில் எனது இடத்தை பிரதிவாதிகள் ஆக்கிரமிப்பு செய்ததாக நான் குறிப்பிடவில்லை என்றால் சொல்லவில்லை ஆனால் அவர்கள் வழக்கு போட்ட பிறகு ஆக்கிரமிப்பு செய்து கட்டியுள்ளார்கள். வழக்கிற்கு முன்பு மேல்புறத்தில் உள்ள தென்வடல் சுவர் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டது சம்மந்தமாக சர்வேயர் அழைத்து சொத்தை அளக்க முயற்சி செய்தேனா என்றால் இல்லை. இது சம்மந்தமாக பிரதிவாதி மீது காவல் நிலையத்தில் எந்த வித புகாரும் கொடுக்கவில்லை என்றால் சரிதான்.

(6) இந்த வழக்கில் எந்த வருடம், எந்த தேதியில் ஆக்கிரமிப்பு செய்தார்கள் என்று குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை. பொதுவாக ஒரு சொத்து ஆக்கிரமிப்பு செய்யப்பட்டால் அந்த சொத்தை சுவாதீனம் கேட்க வேண்டும் என்றால் சரிதான். நீதிமன்ற ஆணையர் அளக்கும் போது உடன் இருந்தேனா என்றால் இருந்தேன். ஆணையர் அறிக்கையில் என்ன குறிப்பிட்டு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்ற விவரம் எனக்கு

தெரியுமா என்றால் வழக்கறிஞர் ஆணையர் 3 அடி எனக்கு இருப்பதாக கூறியது எனக்கு தெரியும். மேற்படி ஆணையர் அறிக்கைக்கு பிறகு சுவாதீனம் கோரி இந்த வழக்கில் திருத்தம் மனு தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மேல்புற தென்வடல் சுவற்றை நான் பூசுவதற்கு எனக்கு உரிமை இருப்பதாக கூறி ஆவணத்தில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். எனக்கு அனுபவப்படி மேல்புற தென்வடல் சுவற்றை பூசுவதற்கு பாத்தியம் உள்ளது என்று வழக்கில் விளம்புகை பரிகாரம் கோரவில்லை என்றால் அளவு எடுத்து எங்களுக்கு கொடுக்கச் சொல்லியும், 3 அடி எனக்கு மேல்புறம் உள்ளது என்று கூறி தான் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேல்புறம் உள்ள தென்வடல் சுவற்றை கடைசியாக எப்போது நான் சென்று பூசினேன் என்றால் இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு வரை பூசினேன். அதற்கு பின்னிட்டு பூச சென்ற போது பிரதிவாதிகள் என்னை பூசக் கூடாது என்று சொன்னார்கள். எனக்கு இடம் இல்லை அனுமதிக்க முடியாது என்று சொன்னார்கள். மேல்புறம் தென்வடல் சுவற்றை நான் பூசச் சென்ற போது எனக்கு இடமில்லை என்று சொல்லி பிரதிவாதிகள் தடத்துவிட்டார்களா என்றால் சரிதான். பூசச் சென்றதாக எல்லாம் பிடுங்கி வீசிவிட்டார்கள்.

(7) தாவாவின் சொத்து விவரத்தில் கடைசி 4 வரியில் குறிப்பிட்டுள்ள சங்கதிகள் பத்திரத்தில் இல்லாத வாசகங்கள் வழக்கில் கண்டு எழுதப்பட்டுள்ளது என்றால் அளவு 3 அடி எனக்கு உள்ளது. சொத்து விவரத்தில் மேற்படி விவரத்தை எந்த அடிப்படையில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் 3 அடி மேல்புறம் உள்ளதை சர்வே செய்து அளந்து கொடுக்கும்படி வழக்கு தாக்கல் செய்துள்ளேன். எனது சொத்திற்கு மேல்புறம் உள்ள தென்னந்தோப்பை அளந்து DTCP அப்ருவலுக்காக சென்ற போது நான் உடன் இருந்னோ என்றால் இல்லை. பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட சொத்து DTCP அப்ரூவல் செய்யப்பட்ட இடம் என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. மேல்புறத்தில் உள்ள சொத்து மனையிடங்களாக பிரிக்கப்பட்ட போது நான் எவ்வித ஆட்சேபணையும் செய்யவில்லை என்றால் சரிதான். மேல்புற தென்வடல் அளவு எவ்வளவு என்றால் 55 அடி ஆகும். மேல்புறம் தென்வடல் என் அளவு 55 அடி என்பது எனது மனைவி பெயரில் உள்ள பத்திரத்தில் கண்டு எழுதப்படவில்லை என்றால் சரியல்ல. எழுதப்பட்டுள்ளது. மேல்புறம் தென்வடல் 55 அடிக்கு மதில் சுவர் என்று கண்டு பத்திரத்தில் எழுதப்பட்டுள்ளதா என்றால் இல்லை. ஏனென்றால் பத்திரச் செலவு அதிகம் வரும் என்பதால்

காட்டப்படவில்லை. ரைஸ் மில்லாக இருந்ததால் காம்பவுண்ட் சுவரும் உள்ளது. பூசுவதற்கு இடமும் உள்ளது.

(8) தாவாச் சொத்தை விற்பனை செய்யும் போதும், வாங்கும் போதும் சொத்தின் அமைப்பை மறைத்து வாங்குவது சட்டப்படி தவறு என்றால் பத்திர எழுத்தர் சொன்னதன் பேரில் மேற்படி ஆவணம் ஏற்படுத்தப்பட்டது. நான் 2000 ம் ஆண்டு கிரையம் பெற்ற போது மேல்புறத்தில் தென்னை தோப்பைச் சுற்றி தென்வடலாக கம்பி வேலி அமைக்கப்பட்டிருந்தது என்றால் இல்லை. எனக்கு மேல்புறம் உள்ள சொத்தை ஆரம்பத்தில் ஜாகீர் உசைன் என்பவர் வாங்கியிருந்தார் என்றால் அது பற்றி தெரியாது. பிரதிவாதிகள் என்ன எதிர்வாதம் தாக்கல் செய்துள்ளார் என்ற விவரம் எனக்கும், என் மனைவிக்கும் தெரியும். இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு மேல்புறத்தில் உள்ள சொத்துக்கள் யார், யாருக்கு பாத்தியம் என்ற விவரத்தை வில்லங்க சான்றிதழ் பெற்று தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை. அனுமானத்தின் பேரில் தான் பிரதிவாதிகள் பேரில் சொத்துக்கள் உள்ளதாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் பிரதிவாதிகள் தான் அந்த வீட்டில் வசிக்கிறார்கள் நாங்கள் பூசப் போனபோது அவர்கள் தான் தடுத்தார்கள் அதனால் இந்த வழக்கை போட்டுள்ளேன். எங்கள் வீட்டின் மேல்புறம் உள்ளது ஜோதி நகர் என்றால் சரிதான்.

(9) மேல்புறச் சொத்தின் தென்புறப் பக்கம் 2 ம் பிரதிவாதி வெள்ளைச்சாமி பெயரிலும், வடபுறப் பக்கம் அவரது மனைவி செல்லகண்ணு பெயரிலும் உள்ளது என்றால் சரிதான். சுற்றி உள்ளது எல்லாம் அவர்கள் பெயரில் உள்ளது. தாவா சுவற்றின் வடமேற்கு மூலலையில் ஒட்டி மேல்புறத்தில் 2 ம் பிரதிவாதியின் மனைவி செல்லக்கண்ணுவின் பெயரில் உள்ளது என்றால் பிரதிவாதியுடையது யார் பெயரில் உள்ளது என்று தெரியாது. தாவாச் சொத்தின் ஒரு பகுதி ஒட்டி மேல்புறம் செல்லகண்ணு பெயரில் உள்ளதால் அவரும் இந்த வழக்கின் அவசிய கட்சிக்காரர் என்றால் சொத்து யார் பெயரில் உள்ளது என்று எனக்கு தெரியாது. ஆனால் அனைத்தும் அவர்கள் சொத்து. மனையிடங்களாக பிரிக்கப்பட்ட சொத்தில் ஒரு பகுதியை ஜாகீர் உசேன் பெயரிலும் ஒரு பகுதியை செல்லகண்ணு பெயரிலும் கிரையம் பெற்றுள்ளார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வடபுறம் மற்றும் மேல்புறம் முழுவதும் பிரதிவாதிகளுக்கு சொந்தமான சொத்து ஆகும். தாவா தென்வடல் சுவற்றை பொருத்து வாய் மொழி உடன்படிக்கை

ஏற்படுத்தியிருந்தேன் என்றால் தவறானது. அதன்படி மேல்புறத்தில் பிரதிவாதியும், கிழபுறத்தில் நானும் பராமரித்து வரவேண்டும் என்று ஒப்புக்கொண்டிருந்தோம் என்றால் சரியல்ல.

(10) தாவாச் சொத்தின் மேல்புறம் அமைந்துள்ள பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட வீட்டின் தென்புற பகுதியில் கிழமேலாக காம்பவுண்ட் சுவர் கட்டி உள்ளார்கள் என்றால் இல்லை வீடு தான் உள்ளது. மேற்படி வீட்டின் சுவர் தாவா சுவற்றை ஒட்டி உள்ளது என்றால் இல்லை. இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு பிரதிவாதி என் பெயரிலும், என் மனைவி பெயரிலும் கணியூர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்து எங்களை விசாரணை செய்தார்கள் என்றால் சரிதான். போலீஸ் மூலம் பிரதிவாதிகள் என்னை மிரட்டினார்கள். எனது வழக்கறிஞரிடம் பேசிய பிறகு தான் சென்றார்கள். அது சம்மந்தமாக நான் எதுவும் புகார் கொடுக்கவில்லை. 2014 ம் வருடம் எனது மேல்புறச் சுவற்றில் ஒரு வழி அமைக்க கதவு வைக்க முயற்சி செய்ததால் தான் பிரதிவாதிகள் காவல் நிலையத்தில் புகார் கொடுத்து அது சம்மந்தமாக போலீசார் விசாரணை செய்தார்கள் என்றால் ஏற்கனவே வழி இருந்தது அதை நான் மராமத்து பார்த்த போது செய்யக்கூடாது என்று புகார் கொடுத்தார்கள்.

(11) 2014 ம் ஆண்டு இந்த வழக்கை தாக்கல் செய்வதற்கு முன்பு அந்த கதவை வைத்துக்கொண்டு இல்லாத உரிமையை ஏற்படுத்தி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. கதவு ஏற்கனவே இருந்தது. என் மனைவி பெயரில் உள்ள கிரைய பத்திரத்திலேயே மேற்படி கதவு உள்ளதை குறிப்பிட்டு எழுதவில்லை என்றால் பத்திர செலவு அதிகமாவதால் எழுதவில்லை. எங்களுக்கு 3 அடி இருந்ததால் நாங்கள் சென்று பூசிக்கொண்டு வந்தோம். நாங்கள் தொடர்ந்து பூசிக்கொண்டு வந்தோம் என்பதை காட்டுவதற்கு உண்டான எந்த ஆவணமும், சாட்சியங்களும் இல்லை என்றால் முத்துச்சாமி கவுண்டர் இருக்கும் வரை அனுமதித்து வந்தார். இவர்கள் வீடு கட்ட ஆரம்பித்த உடன் தடுத்துவிட்டார்கள். நான் வழக்கில் எந்த தேதியில், எப்போது பிரதிவாதிகள் எனது உரிமையை மறுத்தார்கள் என்றும், எப்போது தடுத்தார்கள் என்றும் குறிப்பிட்டு சொல்லாத நிலையில் இந்த தாவா தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல. தடுத்ததால் தான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். பிரதிவாதிகள் எத்தனை அடி நீளத்தில், எத்தனை அடி அகலத்தில், எத்தனை அடி உயரத்தில் எனது

இடத்தை ஆக்கிரமிப்பு செய்து கட்டி உள்ளார்கள் என்று சொல்லாத நிலையில் அதற்காக இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. நான் வழக்கில் எந்த சொத்து விவரத்தில் உள்ள சொத்தை அகற்றிக்கொடுக்க வேண்டும் என்று குறிப்பிடாத நிலையில் இந்த வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. நான் என்னுடைய வழக்கில் என்னுடைய பிரதிவாதிகள் மறுத்துள்ளதாக குறிப்பிட்டுள்ள நிலையில் நான் அதிகபட்ச பரிகாரமான விளம்புகை பரிகாரம் கோராத காரணத்தினார் இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. நான் இந்த வழக்கில் எந்ததேதியில் தடுத்தார்கள் என்று குறிப்பிடாததால் காலவரையறைச் சட்டத்தின்படி இந்த வழக்கு பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எனது சொத்திற்கு வடபுறம் உள்ள பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட இடம் சம்மந்தமாக 1ம் பிரதிவாதி தாக்கல் செய்த அசல் வழக்கு எண்.92/2019 வழக்கு தாக்கல் செய்த காழ்ப்புணர்ச்சியால் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. அந்த வழக்கிற்கு பின்னிட்டு பூசுவதை தடுத்ததால் தான் இந்த வழக்கு தாக்கல் செய்தோம். நாங்கள் பூசச் சென்றதை தடுத்ததாக இந்த வழக்கில் எவ்வித முகாந்திரத்துடனும் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. எனவே செலவு தொகையும் என் மனைவி தாக்கல் செய்த வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல. பூசுவதற்கு எங்களுக்குள்ள 3 அடி இடத்தை எடுத்து கொடுக்க வேண்டும்.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது..

VIJAYAKUMAR K

Digitally signed by VIJAYAKUMAR K
Date: 2024.12.03 17:36:37 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
மடத்துக்குளம்